முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) மூன்றாம் தவணைப்பரீட்சை – 2026

General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026

பொதுத் தகவல் தொழில்நுட்பவியல் I, II	**மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம்**

அறிவுறுத்தல்:

1. ***எல்லா*** *வினாக்களுக்கும் விடை எழுதுக.*
2. *விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது* ***சுட்டெண்ணை எழுதுக.***
3. ***1*** *தொடக்கம்* ***40*** *வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில்* ***சரியான*** *அல்லது* ***மிகப் பொருத்தமான*** *விடையைத் தெரிவுசெய்து, விடைத்தாளின் மறுபக்கத்தில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ற* ***உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியிளை(×) இடுக***

1. வெளியீட்டு சாதனத்திற்கு உதாரணமாக அமைவது எது?
   (1) விசைப்பலகை
   (2) பட்டை குறி வாசிப்பான்
   (3) வலை ஒளிப்படக் கருவி
   (4) வரைவிகள்
2. பின்வருவனவற்றுள் உள்ளீட்டு சாதனமாகவும் வெளியீட்டு சாதனமாகவும் **தொழிற்படமுடியாதது** எது?
   (1) தொடுதிரை
   (2) ஒலிபெருக்கி
   (3) தலையணி கேட்பொறி
   (4) இலத்திரனியல் வெண்பலகை
3. பின்வரும் எந்த சாதனத்தில் காந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.
   (1) வன்வட்டு
   (2) நினைவக அட்டை
   (3) விசைப்பலகை
   (4) சுட்டி
4. பின்வருவனவற்றுள் முறைமையின் பிரதான கூறுகள் **அல்லாதது**?
   (1) உள்ளீடு
   (2) முறைவழியாக்கல்
   (3) வருவிளைவு
   (4) முறைமை சூழல்

5. தகவலுக்கு உதாரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
   (1) கணித பாடத்தில் நான்கு மாணவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகள் 80,76,45,76
   (2) முகப்பற்ற வரைபடம்
   (3) கடந்த வருடம் GIT பாட சித்திவீதம் 68% ஆகும்.
   (4) குறியீடுகள்
6. மத்திய செயற்பாட்டு அலகில்(CPU) காணப்படும் கூறு
   (1) பதிவகம்
   (2) எழுமாற்று அணுகல் நினைவகம்(RAM)
   (3) தாய்ப்பலகை
   (4) வாசிப்பு மாத்திர நினைவகம்(ROM)
7. பின்வருவனவற்றில் கணினி மென்பொருளாக அமைவது
   (1) தெரிவிப்பி
   (2) அச்சுப்பொறி
   (3) சாவிப்பலகை
   (4) பணிச்செயல் முறைமை

Past Papers Wiki

8. திறந்த மூல பணிசெயல் முறைமைக்கு உதாரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
   (1) windows
   (2) Mac Os
   (3) Ubundu
   (4) ios

9. பணிசெயல் முறைமை சூழலில் CLI என்பது
   (1) Command Line Interface
   (2) Command Line Input
   (3) Command Line Instruction
   (4) Cathode Line Interface

10. துனை நினைவகமாக கருதப்படுவது எது
   (1) பதிவகம்
   (2) வன்வட்டு
   (3) எழுமாற்று அணுகல் நினைவகம்
   (4) பதுக்கு நினைவகம்

11. பதின்ம எண் 42 இன் துவித சமவலு யாது?
   (1) 101000 (2) 101001 (3) 101010 (4) 101011

12. துவித எண் 1111 இன் பதினறும வகைகுறிப்பு யாது?
   (1) 15 (2) 14 (3) E (4) F

13. துவித எண் 11101 இன் பதின்ம எண் சமவலு யாது?
   (1) 28 (2) 29 (3) 30 (4) 32

14. ஏழு பிட்களால்(7 bits) வகை குறிக்கப்படும் உயர்ந்தபட்ச குறியிடப்படாத (unsigned) முழுஎண்(integer) ஆவது
   (1) 255 (2) 128 (3) 127 (4) 7

15. பின்வருவனவற்றுள் வழிப்படுத்தப்பட்ட ஊடகம் (Guided media) எது?
   (1) வானோலி அலை
   (2) செங்கீழ்கதிர்
   (3) முறுக்கிய கம்பிச் சோடி
   (4) நுண்ணலை

16. செய்திகளை ஒரு வலையமைப்பில் இருந்து இன்னோரு வலையமைப்பிற்கு அனுப்புவதற்கு பயன்படுத்தப்படும் சாதனம்.
   (1) மொடம் (Modem)
   (2) வழிச்செலுத்தி (Rourter)
   (3) வலையமைப்பு இடைமுக அட்டை(NIC)
   (4) மீள்செய்யி(Repeater)

17. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருள் ஆவணமொன்றில் பந்தியொன்று தவறுதலாக அழிந்தவுடனேயே, எந்தச் சாவி சேர்மானத்தைப் பயன்படுத்தி அவ்வாறு அழிந்த பகுதியை மீண்டும் பெறமுடியும்?
   (1) Ctrl + C (2) Ctrl + V (3) Ctrl + X (4) Ctrl + Z

18. ஓர் ஆவணத்தில் உள்ள பாடத்தை(text) தேடுவதற்கு (find) சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் உள்ள பின்வரும் படவுருக்களில் எதனைப் பயன்படுத்தலாம்?
   (1) 
   (2) 
   (3) 
   (4) 

19. பந்தி(paragraph) ஒன்றினை இருபக்கமும் சமனாக தயார் செய்ய பயன்படுத்தும் நேர்படுத்தல் (Alignment)
   (1) Left (2) Center (3) Right (4) Justify

20. கலவீச்சிலுள்ள எண்களின் மிகக்கூடிய பெறுமானத்தைக் காணப் பயன்படுத்தப்படும் விரிதாளில் உள்ள சார்பு பின்வருவனவற்றுள் எது?
   (1) SUM( )
   (2) AVERAGE( )
   (3) MAX( )
   (4) MIN( )

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

21. பின்வருவனவற்றுள் விரிதாளில் இல் செல்லுபடியாகும் கல முகவரியாக **அமையாதது** எது?

(1) A$3 (2) $A1 (3) A1$ (4) A1

22. சூத்திரம் =5*8+2 - 4*2/4 ஆனது விரிதாள் கலமொன்றில் எழுதப்படும் போது பெறப்படும் பெறுமானம் யாது?

(1) 19 (2) 39 (3) 40 (4) 48


23. ஒரு படவில்லையின் பாங்கைக் கீழே தரப்பட்டுள்ளவாறு பாங்கு 1 இலிருந்து பாங்கு 2 இற்கு மாற்றுவதற்கு ஒரு இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளின் எந்த அம்சத்தை பயன்படுத்தலாம்?

(1) படவில்லை அசைவூட்டம்(Slide Animation)

(2) படவில்லை தளக்கோலம்(Slide layout)

(3) படவில்லைக் காட்சி(Slide show)

(4) படவில்லை வரிசையாக்கி(Slide sorter)



24. படவில்லையில் (Slide) உள்ள விம்பத்தை (image) இடப் பக்கத்திலிருந்து வலப் பக்கமாக மெல்லிழைவாக(smoothly) அசைப்பதற்கு இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளின் எந்த அம்சத்தைப் பயன்படுத்தலாம்?

(1) பக்கத் தளக்கோலம் (Slide layout)

(2) படவில்லை மாறுகை (Slide transition)

(3) அசைவூட்டம் (animation)

(4) படவில்லை வடிவமைப்பு(Slide design)

25. அட்டவணையில் காணப்படும் தரவுகளை அச்சுபிரதி (print) செய்வதற்கு MS Access இல் காணப்படும் பொருத்தமான இலக்குபொருள்(Object)

(1) Report (2) Form (3) Query (4) Page

26. பின்வருவனவற்றில் மாணவரின் வரவு/ வரவின்மை எனும் புலத்திற்குப்(Field) பொருத்தமான தரவு வகை.

(1) Yes/No (3) Numbers

(2) Text (4) OLE Object

27. Ms Access இன் அட்டவணை ஒன்றின் குறித்த ஒரு வகையான தரவுகளை மட்டும் கொண்ட பகுதி.

(1) பதிவு (Record) ஆகும் (3) புலம்(Field) ஆகும்

(2) அறிக்கை (Report) ஆகும் (4) வினவல் (Query) ஆகும்

28. இலக்கமுறை வரைவியல் காணப்படும் வர்ண மாதிரியான RGB இல் காணப்படும் வர்ணங்கள்

(1) Cyan , Magenta ,Yellow and Black (3) Rose, Gray , Black

(2) Red , Green , Blue (4) Red , Gray, Blue

29. பின்வருவனவற்றுள் எந்த வடிவமைப்பு கேட்டொலி பதிவேற்றத்திற்கு அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது?

(1) .mp3 (2) .dob (3) .xlsx (4) .html

30. பின்வருவனவற்றுள் HTML அடையாள ஒட்டின் பண்பாக கருதப்படுவது எது?

(1) a (2) img (3) src (4) font

31. பின்வருவனவற்றில் HTML இல் தலைப்பு ஒட்டாக காணப்படுவது

(1) <UL> (2) <OL> (3) <H1> (4) <P>

PAST PAPERS WIKI

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

32. HTML இன் வரிசைப்படுத்தப்படாத பட்டியல்கள்(Unordered lists)

(1) உருப்படிகள் சாதரணமாக காணப்படலாம்.

(2) உருப்படிகளைக் குண்டுக்குறியுடன் (bullet) காட்டலாம்.

(3) உருப்படிகள் ஆங்கில எழுத்து வரிசையுடன் காட்டலாம்.

(4) உருப்படிகள் இலக்கங்களுடன் வரிசையுடன் காட்டலாம்.

33. http://www.srilanka.lk/web/guest/welcome எனும் URL இன் ஆள்களப் பெயர்(domain name) யாது?

(1) www.srilanka.lk (3) /web/guest/welcome

(2) Srilanka.lk (4) .lk

34. இணையத் தளங்களை உருவாக்குவதற்கு பொதுவாக பயன்படுத்தப்படுவது

(1) HTML ஆகும். (3) word Processing ஆகும்.

(2) Pascal ஆகும். (4) python ஆகும்.

35. பின்வருவனவற்றுள் மேகக் கணிமை(cloud computing) தொழினுட்பத்தின் அனுகூலங்களாக **அமையாதது**.

(1) மென்பொருளுக்கான செலவு குறைவடைதல்.

(2) பராமரிப்பு நடவடிக்கைகள் குறைவடைதல்.

(3) தொடர்ச்சியாக இணைய வசதி தேவைப்படுதல்.

(4) மென்பொருட்களை உடனடியாக இற்றைப்படுத்த முடிதல்

36. பின்வருவனவற்றில் வலை மேலோடி (web browser) **அல்லாதது** எது?

(1) Fire fox (2) Gmail (3) Safari (4) Chrome

37. மின்னஞ்சல் சேவையை வழங்கும் அஞ்சல் சேவையகமானது(mail server) பாரம்பரிய அஞ்சல் முறையில் ..... இன் தொழில்களை ஆற்றுகின்றது.

மேற்குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான பதம் பின்வருவனவற்றுள் எது?

(1) தபால் பெட்டி (3) தபாற்காரன்

(2) அஞ்சலகம் (4) முத்திரை

38. நீங்கள் மின்னஞ்சல் தகவலொன்றைப் பெற்றதும் அந்த தகவலை வேறொருவருக்கு அனுப்புவதற்கு என்ன செய்ய வேண்டும்.

(1) Reply (2) Forward (3) Copy (4) Store

39. இணையம் பற்றிப் பின்வருவனவற்றில் எது **பொய்யானது**?

(1) எவரும் இணையத்திற்கு பொறுப்பாக இருப்பதில்லை.

(2) ஒருமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு எதுவும் இல்லை.

(3) இது கணினி வலையமைப்புக்களின் ஒரு வலையமைப்பாகும்.

(4) கிடைக்கத்தக்க தகவல்கள் எல்லாம் மிகவும் துல்லியமானவையும் நம்பகத்தகவுள்ளனவும் ஆகும்.

40. பின்வருவனவற்றுள் மின் அஞ்சல் முகவரியில் பயன்படுத்தப்படும் குறியீடு எது?

(1) # (2) & (3) @ (4) $

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

பொதுத் தகவல் தொழில்நுட்பவியல் II

✱**நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக

1. ABC என்ற பாடசாலையில் உயர் தரத்தில் பௌதிக விஞ்ஞான பிரவு மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கையை தயாரிப்பதற்காக விரிதாள் மென்பொருளினை பயன்படுத்தி பின்வருமாறு ஆசிரியர் ஒருவரால் தயாரிக்கப்பட்டுள்ளது எனக்கருதி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

	A	B	C	D	E	F	G	H
1	**Index No**	**Name**	**Com_Maths**	**Physics**	**Chemistry**	**Total**	**Average**	**Rank**
2	30221	M.Kmal	90	65	75	230	76.67	4
3	30222	P.Balasuresh	75	74	75	224	74.67	5
4	30223	S.Kajanthan	85	90	68	243	81.00	2
5	30224	A.Ananthkummar	65	78	77	220	73.33	7
6	30225	S.Kandeepan	68	58	55	181	60.33	10
7	30226	A.Partheepan	76	74	68	218	72.67	8
8	30227	S.Umakanthan	84	88	77	249	83.00	1
9	30228	T.Thiveekan	55	78	90	223	74.33	6
10	30229	M.M.Hammem	78	68	45	191	63.67	9
11	30230	S.Seetharam	86	84	68	238	79.33	3
12		**Highest Marks**						
13		**Lowest Marks**						

(1) M.Kaml என்பவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த (Total) புள்ளிகளை காண்பதற்கான சூத்திரத்தை கலம் F2 இல் function(cell1:cell2) எனும் வடிவில் எழுதுக. (2 புள்ளி)

(2) M.Kaml என்பவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சராசரி (Average) புள்ளிகளை காண்பதற்கான சூத்திரத்தை கலம் G2 இல் function(cell1:cell2) எனும் வடிவில் எழுதுக. (2 புள்ளி)

(3) M.Kaml என்பவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையினை (Rank) காண்பதற்கான சூத்திரத்தை கலம் H2 இல் எழுதுக (2 புள்ளி)

(4) Physics பாடத்தில் 75 மேல் புள்ளிகளை பெற்றவர்களின் விபரத்தினை பெற்றுக்கொள்வதற்காக விரிதாள் மென்பொருளில் காணப்படும் வசதி யாது? (2 புள்ளி)

(5) Com_Maths பாடத்தில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட அதியுர் புள்ளிகளை(Highest Marks) கலம் C12 இல் பெற்றுக்கொள்வதற்கான சூத்திரத்தை எழுதுக. (2 புள்ளி)

(6) Com_Maths பாடத்தில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட குறைந்த புள்ளிகளை(Lowest Marks) கலம் C13 இல் பெற்றுக்கொள்வதற்கான சூத்திரத்தை எழுதுக. (2 புள்ளி)

(7) நிலை(**Rank**) இனை ஏறுவரிசைப்படுத்துவதற்கான படிமுறைகளை எழுதுக. (3 புள்ளி)


Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

2. கணினி முறைமையில் தர்க்க செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தர்க்க வாயில்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(1) கணினியில் பயன்படுத்தப்படும் அடிப்படை தர்க்கவாயில்களான **OR** மற்றும் **NOT** ஆகியவற்றுக்கான குறியீட்டினை வரைந்து காட்டுக. (2 புள்ளி)

(2) பின்வரும் சுற்று வரிப்படத்தை கருதுக.



i. S1 , S2 ஆகிய இரண்டு ஆளிகள் உள்ளதோடு L என்பது மின்குமிழாகும். ஆளிகள் மற்றும் மின்குமிழின் ON, OFF ஆகிய சந்தர்ப்பங்கள் முறையே 1 , 0 மூலம் வகை குறிக்கப்படும். S1 , S2 , L ஆகியவற்றுக்கிடையில் சாத்தியமான அனைத்து தொடர்பினையும் உண்மை அட்டவணை மூலம் காட்டுக. (12 * 0.25 = 3 புள்ளி)

ii. மேலே உள்ள உண்மை அட்டவணைக்குரிய பூலியன் கோவையை எழுதுக. (1 புள்ளி)

iii. மேலே உள்ள சுற்றின் தொழிற்பாட்டை வகைகுறிக்கும் தருக்க வாயில் எது? (1 புள்ளி)

(3) **F= (A+B).(A'.B)+(A+B)'** எனும் பூலியன் கோவைக்கான உண்மை அட்டவணையை பூரணப்படுத்துக. (32 * 0.25 = 8 புள்ளி)

Input		**A'**	**(A'.B)**	**(A+B)**		**(A+B)'**	**(A+B).(A'.B)**	**Output**
A	**B**							**F**

3. இன்றைய காலப்பகுதியில் இலத்திரனியல் சாதனங்களின் பாவணையானது மிகவும் அதிகரித்துள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கணினி மற்றும் வினைத்திறன்மிக்க செல்லிடத்தொலைபேசி பாவணைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது இதனால் பாதுகாப்பு பிரச்சினைகள் மற்றும் இலத்திரனியல் கழிவுகளும் அதிகரித்து வருகின்றது.

(1) இலத்திரனியல் கழிவு என்றால் என்ன? (3 புள்ளி)

(2) இலத்திரனியல் கழிவால் வரும் தீங்கு விளைவுகளைக் குறைப்பது எவ்வாறு? (3 புள்ளி)

(3) கணினி மற்றும் வினைத்திறன்மிக்க செல்லிடத்தொலைபேசிகளை பௌதீக ரீதியாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் **மூன்று** தருக. (3 புள்ளி)

(4) கணினி மற்றும் வினைத்திறன்மிக்க செல்லிடத்தொலைபேசிகளை தர்க்க ரீதியாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் **மூன்று** தருக. (3 புள்ளி)

(5) இணைய பயன்பாட்டின் போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் **மூன்று** தருக. (3 புள்ளி)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

4. பின்வரும் வரைபடம் ஒரு வலைபக்கத்தின் வலைமேலோடி வெளியீடொன்றை(browser display) காட்டுகின்றது.

AI COURSE ENROLL NOW!

Artificial Intelligence (AI) Training Program

What You Will Learn

- Introduction to AI
- Using ChatGPT and AI Tools
- Prompt Engineering Basics

Who Can Join

1. students
2. Teachers
3. Professionals

Saturday	5am – 7am
Sunday	7pm – 9pm

வலைமேலோடியூடாக இவ்வெளியீட்டைப்(output) பெறுவதற்குரிய HTML குறிமுறையை எழுதுக.

5. பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் தொடர்பான சில விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

Teacher_No	Name	Date_Of_Birth	Address	Salary
T001	Mr.M.Siva	10.05.1982	Colombo	85000.00
T002	Mrs.P.Gowery	02.03.1970	Kandy	120000.00

(1) மேலுள்ள தரவுகளைப் பராமரிப்பதற்கு நீர் எந்த மென்பொருளைப் பயன்படுத்துவீர்? (2புள்ளி)

(2) மேற்படி அட்டவணையில் முதன்மை சாவியாக தெரிவு செய்யக்கூடிய புலம்(Field) யாது? (2புள்ளி)

(3) ஒவ்வொரு புலத்திற்குமான (Field) சரியான தரவு மாதிரியினை(data type) எழுதுக. (5புள்ளி)

(4) நீர் மேலே தெரிவு செய்த மென்பொருளில் நிபந்தனை (Condition) ஒன்றைக் கொடுப்பதினூடாக தேவையான தரவுகளினைத் தெரிவு செய்ய முடியும். இதற்கு குறிப்பிட்ட மென்பொருளில் என்ன இலகுப்பொருளை (Object) இனைப் பயன்படுத்துவீர். (2புள்ளி)

(5) மேலுள்ள அட்டவணையின் பதிவுகளின்(Records) எண்ணிக்கை யாது? (2புள்ளி)

(6) மேலுள்ள அட்டவணையின் புலங்களின்(Fields) எண்ணிக்கை யாது? (2புள்ளி)

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

6. தற்காலத்தில் அலுவலகங்களில் தொடர்பாடல் மற்றும் தரவு பரிமாற்றத்திற்காகவும் மின்அஞ்சல் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது.

(1) மின் அஞ்சல்(e-mail) எனப்படுவது யாது? (2 புள்ளி)

(2) மின் அஞ்சல் சேவையை அலுவலகத்தில் பயன்படுத்துவதால் கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் **இரண்டு** தருக? (4 புள்ளி)

(3) மின் அஞ்சல் ஒன்றை கையாளுவது தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு கீழே தரப்பட்ட சொற்பதங்களில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

Spam/Junk , Inbox , Sign in , Drafts , Sign Out , Sign Up/Create an account , Sent , Trash/Delete ,

i. புதிய மின் அஞ்சல் ஒன்றை உருவாக்குவதற்கு எதனை தெரிவு செய்யவேண்டும்?

ii. மின் அஞ்சல் முகவரி ஒன்றினுல் நுழைவதற்கு எதனை தெரிவு செய்யவேண்டும்?

iii. மின் அஞ்சலில் இருந்து வெளியேறுவதற்கு எதனை தெரிவு செய்யவேண்டும்?

iv. பெறப்பட்ட மின் அஞ்சல்கள் சேமிக்கப்பட்டிருக்கும் இடம் எது?

v. அனுப்பப்பட்ட மின் அஞ்சல்களை சேமித்து வைத்திருக்கும் இடம் எது?

vi. தேவையற்ற மின் அஞ்சல்கள் சேமிக்கப்பட்டிருக்கும் இடம் எது?

vii. அழிக்கப்பட்ட மின் அஞ்சல்கள் காணப்படும் இடம் எது?

viii. அனுப்புவதற்காக தயார் செய்யப்பட்டு முழுமைப்படுத்தப்படாத மின் அஞ்சல்கள் சேமிக்கப்பட்டிருக்கும் இடம் எது?. (8 * 1 = 8 புள்ளி)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library